
உ
இறைவன் துணை.
சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

# சித்தாந்த சிகாமணியின் அங்கத்தலத் திரட்டு.

(கருத்துரையுடன்)



வெளியிடுவோர்:

**புலவர். து. கந்தசாமி**
ஒய்வு பெற்ற தமிழாசிரியர்,
13பி, சிவன் சந்நிதித் தெரு,
சின்னசேலம் - 606 201.

1992.

உ

இறைவன் துணை.


சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

# சித்தாந்த சிகாமணியின் - அங்கத்தலத் திரட்டு.

(கருத்துரையுடன்)

நல்லாற்றூர்:
தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய
சித்தாந்த சிகாமணி என்ற நூலில் இருந்து
திரட்டப்பெற்ற அங்கத்தலமூலமும்,

இதற்குக்
குகையூர் தமிழ்ப் பேராசிரியர்
திரு. அடிகளாசிரியர் அவர்களால்
எழுதப்பெற்ற கருத்துரையும்.



வெளியிடுவோர்:
புலவர். து. கந்தசாமி
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்,
13பி, சிவன் சந்நிதித் தெரு,
சின்னசேலம் - 606 201.

1992

முதல் பதிப்பு: 1992

உரிமை: வெளியிடுவோர்க்கு.

விலை: ரூ. **5—00**.

இந்தநூலை நல்ல முறையில் அச்சிட்டு அளித்தவர்:

**திரு. தி. கு. அங்கப்பன்** அவர்கள்.

இராசன் மின் அச்சகம்

வாழப்பாடி-636115 சேலம் மாவட்டம்.

இவருக்கு எங்கள் வாழ்த்து.

உ

இறைவன் துணை

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

முன்னுரை:

சிவலிங்கத்தை அணிந்துகொண்டு அதனை வழிபட்டு வருதல் வீரசைவருடைய ஆன்மீகக் கடமைகளுள் முதல் கடமையாகும். இக்கடமை நன்கு நடைபெறுவதற்கு வீரசைவசமய சாத்திர உணர்ச்சி மிகமிக வேண்டியுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றியருளிய நூல்களுள் ஒன்றான 'சித்தாந்த சிகாமணி' என்ற நூலில் உள்ள அங்கத்தலத்தில் இருந்து திரட்டப்பெற்ற **சித்தாந்த சிகாமணியின் அங்கத் தலத்திரட்டு** நூல் ஒன்று எங்களால் திரட்டப்பெற்றுள்ளது. இனி அந்த நூலில் உள்ள இலிங்கத்தலத்தில் இருந்து இரண்டாம் பகுதி திரட்டப்பெறவேண்டும். முதல் பகுதியை அச்சிட்டு வெளிப்படுத்தி அதுஎப்படிப் பயன்படுகின்றது என்பதை தெரிந்துகொண்டே அப்பணியைத் தொடங்க வேண்டும். எங்கள் அறிவுக்குப் புலப்பட்ட வாறு இம்முதல் பகுதியைத் திரட்டி இப்பொழுது அச்சிட்டு வெளியிடுகின்றோம். இப்பணிக்கு முதல் துணையாக இருந்தவர் சின்ன சேலம் ஒய்வுபெற்ற தமிழாசிரியர் து. கந்தசாமி என்பவராவர். அவர் தமது 71-ஆம் யாண்டின் நிறைவு நாள் (8—8—1992) நினைவாக இத்திரட்டு நூல் வெளிவருகின்றது. அறிஞர்கள் இதனைப் படித்துப்பார்த்து, தங்களுக்குத் தோன்றும் கருத்துக்களை எங்களுக்குத்தெரிவிக்க வேண்டுகின்றோம். வணக்கம்.

இங்ஙனம்,

**து. கந்தசாமி,**
ஒய்வு பெற்ற தமிழாசிரியர்
13பி, சிவன் சந்நிதித் தெரு,
சின்னசேலம் அஞ்சல்.
கள்ளக்குறிச்சி வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

**திரு. அடிகளாசிரியர்,**
ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்,
திருவருளகம்.
கூகையூர் அஞ்சல் 606 301
[வழி] நயினார்பாளையம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

உ

இறைவன் துணை

வெற்றிவேல் முருகன் நற்றமிழ் வாழ்க.

இளமைக்காலம் முதல் தாயும், தந்தையும், ஆசிரியராகவும் இருந்து என்னை உயர்நிலைக்குக் கொண்டு வந்த, குகையூர் அண்ணார் புலவர் திரு. அடிகளாசிரியர் அவர்களுக்கு, எனது 71-ஆம் ஆண்டு நிறைவு நாள் (8—8—1992) நினைவாக என் குடும்பத்தினர் (புனிதவதி - பாலமுருகன்) சார்பில் சித்தாந்த சிகாமணியின் அங்கத்தலத்திரட்டு என்றஇந்நூலினைப் பணிவன்புடன் உரிமைப்படுத்துகின்றேன். என் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நூலுக்குக் கருத்து உரை எழுதி அளித்தமைக்கு, எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

இங்ஙனம்,

அன்புள்ள,

**து. கந்தசாமி,**

ஒய்வு பெற்ற தமிழாசிரியர்

**13பி, சிவன் சந்நிதித் தெரு,**

**சின்னசேலம்** அஞ்சல்.

தென்னார்க்காடு மாவட்டம்.

உ

இறைவன் துணை

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

# சித்தாந்த சிகாமணியில் அங்கத்தலத் திரட்டு.

## விநாயகர் வணக்கம்

அரியசஞ்சிதம் அகலவும்
புரிவுடம்பிடர் ஒழியவும்
விரியும் நம்பவம் எரியவும்
கரிமுகன்கழல் கருதுவாம்.

-வீராகமம்.

கருத்து:- அரியசஞ்சிதம் என்றது இறந்தகால வினை. புரிவுடம்பிடர் என்றது நிகழ்கால வினையாகிய பிராரத்த வினை. விரியும் நம்பவம் என்றது ஆகாமிய வினையாகிய எதிர்கால வினை. ஆக இந்த மூன்று வினைகளும் நீங்கும்படி ஆனைமுகக் கடவுளின் திருவடியை வணங்குவோம்,

## வீர சைவன் யார்?

1. சித்தம் ஆகும் சிவமயம் ஆகிய
வித்தையூடு விசேடம் அது ஆகியே
எத்தினால் இங்கு இரமிப்பன் அன்னவன்
பொய்த்திடாத புகழ் வீர சைவனே.

கருத்து:- சிவவித்தையில் இரமிப்பவன் வீரசைவன்,

## பத்தத்தலம்

### வீர சைவருடைய பிறப்பு

2. பண்டோராயிரம் பிறவியில்பயின்றபுண்ணியத்தால்
மண்டு தீவினைப் பரப்பறப் புனிதமாய் மனத்தைக்
கொண்டதேகியே கடல்குடித்து உயர்குறு முனிவ!
பிண்ட நாமம்உற் றிடும்என அறைகுவர்பெரியோர்

கருத்து:- ஓர் உயிர் முன்பிறந்த பல பிறப்பில் தான் செய்த புண்ணியப் பேற்றால், தன்னுடைய தீவினை எல்லாம் நீங்கிவிடத் தூய மனத்தைப்பெற்று, வீரசைவ நெறியைப் பின்பற்றுதற்குரிய உடம்புடன் கூடிப்பிறப்பான் என்க. இது முதல் தலமாகிய பிண்டத்தலம்.

## வீர சைவனுடைய கொள்கை

3. வினைவழி திரிதரும் மெய்யும் வேறதாய்
நினைவரும் நித்தஆன் மாவும் நித்தமாய்
அனையஆன் மாலின்வே றாய ஈசனும்
பினம்உற அறிபவன் பிண்ட ஞானியே

கருத்து:- அழியும் உடம்பின் இயல்பையும், அதில் வாழும் அழியாத ஆன்மாவின் இயல்பையும், அவ் ஆன்மாவை இயக்கும் அழியாத ஈசனுடைய இயல்பையும், வேறுபாடுற அறிபவன் வீரசைவ ஞானி என்க.

## வீரசைவனுடைய பக்குவ நிலை

4. ஆசுஅறும் மனமுடன் அநித்த நித்தமும்
தேசுஉற உணர்ந்துநல் தெய்வ வாழ்வினும்
நேசமது அகன்றுள நெறியி னோன்இடைப்
பாசமது அறுசிவ பத்தி தோன்றுமால்.

கருத்து:- குற்றம் அற்ற மனத்துடன் அழியும் பொருள். அழியாப் பொருள் இவற்றின் இயல்பை அறிந்து, சுவர்க்க வாழ்விலும் பற்று இல்லாதவனாய் உள்ள இவ்வீரசைவனிடம் சிவபத்தி தோன்றும் என்க.

## சிவபத்தி உடையவர் குருவை அடைதல்

5. மாசறு மனத்தன் ஆகி மதியுடை விராகி ஆவோன்
பாசமது அனைத்தும் நீக்கும் பரசிவம் உணரத் தோன்றும்
நேசமோடு அடைவன் பாம்பின் நெறிதிரைக் கடல் வறப்ப
ஆசமனம்செய்து ஓங்கும் அகத்தியப் பெயரினானே

கருத்து:- குற்றம் அற்ற மனத்தை உடையவனாய் பற்றற்ற மனத்தை உடைய மாணாக்கன், பரமசிவனை உணர்ந்து கொள்வதற்காகத் தோன்றும் அன்போடு கூடியவனாய்க் குருவை அடைந்து உபதேசிக்க வேண்டுவான். அக்குரு அம் மாணவனுடைய பக்குவ நிலையை அறிந்து திருநீறு அணிவித்து, ஐங்குரவர் கும்பநீரைத் தெளித்து, ஐந்தெழுத்து மந்திரத்தை உபதேசிப்பார். பின் இலிங்க தாரணம் செய்வார். அவ்விலிங்கம் மூன்று வகைகளாக இருக்கும்

6. திரம்பெறும் இலிங்கம் மூன்று திறத்ததாந் தூல
லிங்கம்
பரம்பெறு சுக்குமம்பின் பராற்பரம் என்னத் தூலங்
கரம்பெறும் இட்ட லிங்கங் கருத்தது சுக்குமந்தான்
நிரம்புறும் இலிங்கத்தானே நிகழ்பராற் பரம்என்று
ஓர்வாய்.

கருத்து:- மேலேகூறிய இலிங்கம் தூல இலிங்கம் என்றும், சூக்கும இலிங்கம்என்றும், பராற்பர இலிங்கம் என்றும், மூன்றும்வகைகளாக இருக்கும். அவற்றுள் தூல உடம்பின்கையிலே வைத்து பூசிக்கப்படுவது தூல இலிங்கமாகும். இதற்கு இட்டலிங்கமென்றும், சிரியா லிங்கம் என்றும் பெயர் உண்டு. சூக்கும உடலில் கருத்திலே வைத்துக் கருதப்படுவது சூக்கும லிங்கமாகும். சூக்கும உடம்பிற்கு மேல் எங்கும் வியாபித்து அறிவு வடிவமாக இருக்கின்ற பெரும் பொருளே பராற்பர இலிங்கமாம்.

## வீரசைவரின் இலிங்க வழிபாடு.

7. தம்பொருளாம் இலிங்கம் தன்னைவள் இதழ்
அவிழ்ந்த
வம்பலர் கந்தம் ஆதி மருவுற முறையில் கொண்டு
கம்பம்இல் மனத்தினோடு கரபீடத் தினில்
அர்ச்சிப்பர்
இம்பரின் என்றும் சுத்தர் எனப்படும் வீர சைவர்.

கருத்து:- எப்பொழுதும் தூயவராகவே உள்ள வீரசைவரானவர் தமக்குப் பொருளாக உள்ள இட்டலிங்கத்தைத் தம்இடக்கையாகிய சத்திபீடத்தில் வைத்து மலர், சந்தனம் திருநீறு முதலியனவற்றைக் கொண்டு பூசிப்பர்.

## பீடபூசையில் கரபீடபூசையே சிறந்தது

8. உரம்பெறு முத்திநேயம் ஊற்றமாம் வீரசைவர்
நிரந்தரம் விடாது பற்று நிகழ்கர பீடபூசை
பரம்புறம் இயற்றும் பீடபூசையில் பராரைவெற்பில்
இருந்துஉமை பாகனோடு ஒப்பு என்பதை
உணர்த்த வல்லோய்.

கருத்து:- வீடுபேற்றை விரும்புகின்ற வீரசைவர்கள் இறைவனை எப்பொழுதும் விடாது பற்றிப் போற்ற வேண்டியவர்கள். ஆகையி-னால், பூசாகாலத்திலும் தம் கையாகிய பீடத்தின் கண்ணேயே இறைவனை வைத்துப்பூசிப்பர். இக்கர பீடபூசை புறம்பே ஒரு பீடத்தில் எழுந்தருளச் செய்து பூசிக்கும் பூசையைக் காட்டிலும் சிறந்தது.

## திருநீறு.

9. கலயமுத லாயபாத்திரத்துள் அமர் நீறுஒன்று
கவர்ந்து மூன்றாம்
நலமருவு சந்திகளில் எனினும் எப்போது எனினும்
அதைநானம்செய்த
நிலையதனில் புதுப்புனலால் கரம்விளக்கி மவுனி-
யாய் நீற்றைஎண்கால்
பலம்உதவு மூலமநுக் கொண்டு அபிமந்திரித்துப்-
பின் பகர்ந்தவாறே.

10. சிரமதில் ஈசானத்தால் புருடத்தால் முகம்அதனில்
தீர்கோரத்தால்
உரமதனில் வாமதேவத்தினால் குய்யத்தில்
ஒண்பதத்தில்
வரமருவு சத்தியோசாதத்தால் பிரணவமாம்
மந்திரத்தால்
புரமுழுதும் புனைந்திடுகஅநாதிமல இருள்துமிக்கும்
பூதிதன்னை.

கருத்து:- திருநீறு அணிந்து கொள்ளுகின்ற ஒருவன் தான் நீராடிய பின் தன் கைகளைத் தூய்மை செய்துகொண்டு, கலயம் முதலான பத்திரத்துள் வைக்கப்பட்டுள்ள திருநீற்றை எடுத்து மூன்று சந்தியா காலங்களிலாவது, எப்பொழுதாவது மவுனியாகி அந்த நீற்றை மூல ஐந்தெழுத்தை எட்டுமுறை கூறி மந்திரித்து, பின் தண்ணீர் வீட்டுக் குழைத்து, ஈசான மந்திரத்தால் உச்சியிலும் தற்புருடமந்திரத்தால் நெற்றியிலும், அகோர மந்திரத்தால் மார்பிலும், வாமதேவ மந்திரத்தால் மார்புக்குக்கீழ்உள்ள பகுதியிலும் சத்தியோசாதமந்திரத்தால் கால்களிலும், பிரணவ மந்திரத்தால் ஏனைய உறுப்புக்களிலும் முக்குறிகளாய் அணிந்து கொள்க.

## உருத்திராக்கம் அணிதல்

11. பூதியால் உடல் முழுதும் உத்தூளனம் புரிந்து
சாதம் மேவுஅரும் அக்கமா மணியினைத் தரிக்கும்
மேதை யானவன் உருத்திரனேஎன விளம்பும்
ஆதி மாமறை அனைத்தும்இவ் வுரைக்கிலைஐயம்.

கருத்து:- திருநீற்றை உடல் முழுவதும் அணிந்துகொண்டு, ஒளி பொருந்திய உருத்திராக்கமணியினை அணிந்துகொள்ளும் அறிவுள்ளவனைச் சிவபெருமான் என்றே திருமறைகள் கூறும்.

## ஐந்தெழுத்து

12. அக்க மாமணி நீறணி இலிங்கதா ரணன்தான்
மிக்க தாம்சிவ தத்துவம் விளங்குற விளக்கும்
நக்கன் நாமமாம் ஐந்தெழுத் தாகவே நவிலும்
தக்கவித்தையைமுறையினில் செபித்திடத்தகுமால்.

13. முன்னர் ஓதுக நமஎன விளம்புறும் மொழியைப்
பின்னர் ஓதுக சிவாய என்று இங்ஙனம் பிறங்கும்
அன்ன அஞ்செழுத்தாகிய மந்திர அரசைப்
பன்னருஞ்செழு மறைகளின்முடியெலாம் பரிக்கும்.

14. ஐந்து பூதம்ஐம் பொறிகளோடு ஐம்புலன் அமர்ந்த
ஐந்து எனும்கரு மேந்தியம் ஐவர் காரணமாம்
ஐந்து எனும்தொழில் ஐம்பெரும் பிரமங்கள்
அனைத்தும்
ஐந்து எழுத்தினால் உணர்த்துவர்அறிவறிந்தவரே.

கருத்து:- உருத்திராக்கமணியும், திருநீறும் அணிகின்ற இலிங்க தாரணனாகிப வீரசைவன், சிறந்த சிவ தத்துவத்தை விளங்கச் செய்வதும், சிவனுடைய பெயராக அமைந்துள்ளதும் ஆகிய ஐந்தெழுத்து என்னும் மந்திரவித்தையை முறைப்படி செய்துவரவேண்டும்.

நம என்கின்ற சொல்லை முன்னர் வைத்து ஓதுக. சிவாய என்கிற சொல்லை அதன் பின்னர் ஓதுக. இப்படி ஓதுவதால்பிறந்த நம சிவாய என்கின்ற அரச மந்திரத்தை நம: சிவாயச: என்று ஸ்ரீருத்திரம் என்கின்ற திருமறைப் பகுதி கூறும் என்க.

அறிஞர் ஐந்து பூதங்களையும், ஐந்து பொறிகளையும், ஐந்து ஞானேந்திரிய கர்மேந்திரியங்களையும், பிரமன் முதலானவர்களைக் காரணமாகக் கொண்ட படைத்தல் முதலான ஐந்துதொழில்களையும், சத்தியோசாதம் முதலான ஐந்துபெரிய பிரமங்களையும் மேற்கூறிய ஐந்தெழுத்திற்குப் பொருளாகக் கூறுவர் என்க.

## பத்தன் இயல்

15. நலங்கொள் பூதி நயனத் திருமணி
அலங்கல் மேனி அணிந்து புனிதனாய்ப்
புலங்கொள் அஞ்செழுத்து ஒண்மநுப் போற்றுறும்
இலிங்க தாரணன் பத்தன் எனப்படும்.

## பத்தியின் வகைகள் 9

16. புகழ்தல் கேட்கை புனிதன் கருதுதல்
மகிழ்குற் றேவல் அருச்சனை வந்தனை
தொகுநல் தொண்டொடு தோழமை நன்கொடை
பகரும் மற்றிவை நல்நவ பத்தியே.

## சிவபத்தனுக்குக் குரு பத்தியும் வேண்டும்

17. மூலகா ரணன்என முழுத ளித்திடும்
பாலலோ சனன்தனைப் பூசை பன்னல் போல்
ஞாலமேல் வருகுரு பரனை நாள்தொறும்
ஏலவே அருச்சனை இயற்ற வேண்டுமால்.

## சிவபத்தனுக்கு அடியார் பத்தியும் வேண்டும்

18. செவ்விய குருவிடைச் சிவலிங் கத்திடை
எவ்வகை அன்புடன் இனிய செய்துறும்
அவ்வகை சங்கமந் தனினும் அன்பினை
வெவ்விய வினைதபு விவேகி செய்யுமால்.

கருத்து;- நல்ல குருவினிடத்தும், சிவலிங்கத்திடத்தும் எவ்வாறு அன்பு செய்கின்றானோ, அவ்வாறே அடியாரிடத்தும் சிவபத்தன் அன்பு செலுத்த வேண்டும்.

## பாதத்தீர்த்தம் கொள்ளுதல்

19. பத்தி கொண்டுஅரன் பாதப் புனல்எனச்
சத்து எனுங்குரு சங்கமமெல் அடிக்கு
உய்த்த ஒண்புன லும்களித்து உண்பரால்
நித்த லும்சிவ நேசம் அடைந்துளார்.

கருத்து:- சிவ பத்தர்கள் நாள்தோறும்சிவலிங்கப் பாதத்தீர்த்-தத்தைக்கொள்ளுதல் போலவே குருபாதத் தீர்த்தத்தையும், அடியார் பாதத்தீர்த்தத்தையும் வழிபட்டுக் கொள்வர்.

## தொடை

20. தேசி கற்கும் சிவலிங்கத் திற்குமால்
ஆச கற்றும் அருள்சிவ யோகிக்கும்
பேச லுற்ற அவர்பிர சாதஊண்
நேசம் உற்றவர் நின்று கொடுக்கவே.

## 2 - மகேசத்தலம்

### மகேசன்

21. பங்கயன் ஆதிய பசுக்கட்கு என்றுமே
இங்குஇறை யாகிய ஈசன் தன்னையே
துங்கன்என்று உணர்தருதுணிவு பெற்றுளோன்
மங்கல நெறியுடை மகேசன் ஆகுவான்.

கருத்து – திருமால், பிரமன் முதலிய தேவர் எல்லாம் பாசபந்தத்தோடு கூடிய பசுக்கள் என்றும், சிவபெருமானே பாசபந்தம் நீங்கிய மகேசன் என்றும், ஆராய்ந்து கொண்டதுணிபால் அம்மகேசனையே வழிபடத்தொடங்கிய சிவ பத்தன் மகேசன் ஆகின்றான்,

### மகேசருடைய நியமம்

22. நியமம் கொண்டுபூ சனைசெயும் நிமலலிங் கத்தில்
செயலில் அன்புடன் அர்ப்பிதம் செய்தசே டத்தை
அயில்பு மெய்வளர்ப் பவன்எவன் அனையதன் மையனே
மயல் அகன்றுஉயர் தருதனி வீரமா மகேசன்.

கருத்து – தான்வழிபடும் இட்டலிங்கத்திற்கு அன்போடு படைத்த சேடமாகிய உணவை அருந்தி அதனாலே தன் உடம்பைப் பாதுகாத்துக்கொள்பவன் எவனோ அவன் வீரமாகேசன் என்க.

23. சோதி லிங்கநன் னிட்டையில் விலக்குஎனத் தோன்றும்
சாதி தன்குல தருமங்கள் அனைத்தையும் தகுந்த
நீதி ஒன்றுள னாகிய நிலைபெறும் மகேசன்
தீது அடைந்துள தொல்லை ஆசிரமத்தில் தீர்ந்தோன்.

கருத்து:- வீரமாகேசனான ஒருவன் ஆவதற்கு முன் தான்பின் பற்றியிருந்த சாதிகுல தருமங்களை விட்டுவிட வேண்டும் என்பது.

## சிவதீக்கை உடையவர்களுக்குச் சாதி வேற்றுமை இல்லை.

24. முந்தை உற்றுள இந்தனத்து உருவங்கள் மூண்ட
வெந்த ழல்கவர்ந்து உண்ணுற விரவுறா வாபோல்
நந்துறச்சிவ தீக்கையை நண்ணினோர் தமக்குள்
பந்தம் உற்றுள சாதிவேற் றுமையிலை பகரின்.

கருத்து:- விறகினுடைய முந்தைய பல்வேறு வடிவங்கள் எல்லாம் நெருப்பு பற்றி உண்ண வெந்து நீறாகி இல்லை ஆகினார் போல ஒருவன் நல்ல ஆசிரியன் இடத்தே முறைப்படி சிவதீட்சையைப் பெற்றுக் கொண்டால் இந்தப் பழக்கத்தினால் முந்தைய சாதி வேற்றுமைப் பழக்கங்கள் எல்லாம் தானே போய்விடுகின்றன.

## இறைவனைப் பூசிக்கத்தொடங்கியவன் மேற்கொள்ள வேண்டியகொள்கை.

25. பூசனை செய்வோன் கொள்வோன் பேதம் என்று
உறவால் போற்றும்
பூசனை ஆதிக் கன்மம் பொன்றலால் இலிங்க
நிட்டை
நாசமது உறவால் எங்கும் பெறஞானம் இலாமை
தன்னால்
ஈசனை வந்திக்கின்றோன் எங்கும் அத்துவிதம்
செய்யான்.

கருத்து:- சிவதீட்சை பெற்றுக் கொண்டு ஒருவன் இறைவனைப் பூசிக்கத் தொடங்கின், பூசிக்குந் தன்னையும், பூசிக்கப் படும் இறைவனையும், வேறாக வைத்தே பூசிக்க வேண்டி இருத்தலின், இறைவனைப் பூசிக்கின்ற யாரும் இறைவன் இடத்து அத்துவித பாவனை செய்யான் என்க. அத்துவித பாவனை செய்வான்ஆனால் அவனுடைய சிவபூசாக் காரியங்களும் இலிங்க நிட்டையும் கெடும் என்க.

விளக்கம்:- வீரசைவ நெறியினர்; பத்தர், மகேசர், பிரசாதி, பிராண லிங்கி, சரணன், ஐக்கியன் என ஆறுவகைப்படுவர். அவருள் முதல் மூவரும் கர்மயோகிகளும், பின் மூவரும் ஞானயோகிகளும் ஆவார். ஆதலின் கன்மயோகிகள் துவித பாவனைக்கும், ஞானயோகிகள் அத்துவித பாவனைக்கும் உரியராதலால் இவ்வாறு கூறினார் என்க.

## இறைவனைப் பூசிப்பவன் நாள்தோறும் ஆவாகனம் செய்யக்கூடாது.

26. அச்சிவ லிங்கம்வந்தித்து அத்துவிதத்தகை நீத்தோன்
மெய்ச்சிவ மயமாய் நின்று விளங்குதல் இட்ட
லிங்கத்து
இச்சையில் அரனை ஆவா கனித்திடல் இயல்பு
அன்றென்பர்
பொய்ச் செயல் கடந்து மிக்க புலக்குறும்பு எறிந்த
வீரர்.

27. சிற்கலை யொடுதி கழ்ந்த சிவலிங்கம் தீக்கை
தன்னால்
நற்குரு அளித்த அன்றே நண்ணுறும் அமலன்
என்றும்
பொற்புறும் உணர்வின் மாறாய்ப் பொருந்தும்
ஆவாகனந்தான்.
பிற்பெறு தினங்கள் தோறும் பேணுத லால்என்
பேறே.

கருத்து:- ஆசிரியர் இடத்தில் தீட்சை பெற்றுக்கொண்டு பூசிக்கத் தொடங்கியவன், அதன் காரணமாக அத்துவிதக் கொள்கையை விட்டு ஆண்டான் அடிமை என்னும் துவிதக் கொள்கையை மேற்கொண்ட வீரசைவன். தான் பூசிக்கும் சிவலிங்கத்தில் நாள் தோறும்

சிவனை ஆவாகனம் செய்யான் என்க. ஏன் எனில்? நல்ல ஆசிரியன் தனக்குத் தீட்டசை செய்து வழிபாட்டிற்காகச் சிவலிங்கத்தைக் கொடுத்த பொழுதே சிவனை அதில் ஆவாகனம் செய்துகொடுத்து விட்டபடியால் ஒவ்வொருநாளும் சிவனை அதில் ஆலாகனம் செய்ய வேண்டுவது இல்லை என்க. இதுவீரசைவர் கொள்கை. சைவர்கள் தம் வழிபடும் இலிங் கத்தில் ஒவ்வொரு நாளும் சிவனை ஆவா- கனம் செய்து பின் விசர்ச்சனம் செய்வர் என்க.

இதனை ''ஆக்கில் அங்கே உண்டாய் அல்லது (விசர்ச்சனம் செய்த பொழுது) அங்கு இல்லையாய்ப் பார்க்கில் பரமதன்று'' (9) என்று திருவுந்தியாரும் கூறுதல் காண்க.

## இறைவனை இட்டலிங்கத்தில் வைத்து வழிபடுக.

28. எங்கணும் நிறைவோன் ஆக இயல்பினும்அமலன் தன்னைத்
தங்குறும் நூல்கள் எல்லாம் தனது பற்று ஆகி நின்ற
மங்கல மாம் இலிங்கம் ஆதிய வடிவில் என்றும்
அங்கணன் அதிகமாக அமர்வன்பூ சனைப்பொருட்டு.

29. ஆதலால் அருச்ச னைக்கண் உயர்ந்தவன் அனைத்தும் விட்டுக்
காதலால் சிறந்து மூலகாரணன் விளங்கா நின்ற
சோதியாம் இட்ட லிங்கம் துணிவொடு பூசை செய்க
நீதியாம் அனையன் எங்கும் நிறைதலை விலக்கினானே.

கருத்து:- இறைவன் எங்கும் நிறைந்னோகி இருப்பினும் அவன் இலிங்கம் முதலான பூசனை வடிவில் அந்த பூசையை ஏற்றுக்கொள் வதற்காக அதிகமாக அமர்ந்திருப்பான். ஆதலால் இட்ட லிங்கத்தி- லேயே இறைவனை வைத்து வழிபடுக

## இறைவன் சிறப்பாக இருக்கும் இடங்கள்.

30 சங்கரன் ஆகும் ஈசன் சகமயம் என்றும் உள்ளப்
பங்கய மலரில் என்றும் பத்தர்பால் சிறந்து
தோன்றும்
பொங்குறு கயிலை பொன்னம் பொருப்பொடும்
அந்தரத்தும்
அங்கது போல்வி சேடித்து அமர்தரும் இறைவன்
அன்றே.

31 சுத்தர்கள் இடத்தும் தீர்ந்த துறவினர் இடத்தும்
ஞானச்
சித்தர்கள் இடத்தும் மிக்க சிவவேடத் தவர்
இடத்தும்
உத்தமர் இடத்தும் பாசம் உதறும் மாகேசர் ஆகும்
பத்தர்கள் இடத்தும் என்றும் பரசிவம் விளங்கும்
அன்றே.

கருத்து:- இறைவன் பொதுவாக உலகம் எல்லாம் நிறைந்து இருந்தாலும் வெள்ளிமலை, பொன்மலை, ஞானவெளி (சிதம்பரம்) என்னும் இடங்களில் சிறப்பாக எழுந்தருளி இருப்பதைப் போலப் பத்தருடைய உள்ளத் தாமரையிலும் எழுந்தருளிஇருப்பவன் என்க. அப்பத்தர்கள் யார் எனில்? தூயோர், துறவினர், ஞானசித்தர், சிவ வேடத்தர், நல்லோர் வீரமாகேசர் எனப்பலராக இருப்பர்.

## 5- பிரசாதி

32. தனக்கு உறும் இலிங்கநிட் டாதி சார்பினால்
வினைப்பகை கடந்துள விறல்ம கேசன் ஒண்
மனப்பிர சாதமே மருவும் ஆற்றினால்
கனப்பிரசாதியாம் என்பர் கற்றுளோர்.

கருத்து:- வீரமாகேசன் என்பவன் தனக்குரிய இலிங்க வழிபாடு முதலிய செயல்களை நன்றாகச்செய்து வந்தமையால், அவன்மனத் தூய்மை பெறுகின்றான். அதனால் அறிஞர் அவனைப் பிரசாதி என்று அழைக்கின்றனர், பிரசாதம் என்னும்சொல் தூய்மை தெளிவு என்று பொருள்படும்.

## பிரசாதம் ஏற்படக் காரணம்.

33 போதகா ரணம் எனும் புனிதன் நல்பிர
சாதம் ஆகியநிரு மாலியம் தனைத்
தீதிலா மனப்பிர சாதத்திற்கு உணும்
ஈதுளான் நல்பிற சாதி என்பவே.

கருத்து:- இட்டலிங்கத்திற்குப் படைத்த பிரசாதம் ஆகியநிருமாலிய பொருளை தனக்கு மனத்தூய்மை உண்டாவதற்காக (பிரசாதம்- தூய்மை) உண்டுவருதலினால் அறிஞர் அவனைப் பிரசாதி என்று அழைத்தனர். எனவே வீரசைவர்கள் இட்டலிங்க நிவேதனப் பொருளையே உண்டுவர வேண்டும் என்பதாயிற்று.

## பிரசாதிக்குக் குருபக்தியும் வேண்டும்.

34 நல்குரு பத்திஇல் லார்க்கு நாடுறில்
நல்சிவ பத்தியும் சனித்தி டாதுஒரு
சிற்கன சிவன்இடை செய்யும் பத்திபோல்
சற்குரு பத்தியும் செய்யத் தக்கதால்.

கருத்து:- அறிவு விளக்கம் செய்கின்ற நல்லகுருபத்தி இல்லார்க்குச் சிவபத்தியும் தோன்றாது. ஆகையால், சிவன்இடத்தில் செய்கின்ற பத்தி போலக் குரு பத்தியும் செய்யத்தக்கதாம். உம்மையால் அடியார் பத்தியும் வேண்டும் என்க.

## சிவபூசை செய்வோர் எல்லாம் சிவகணங்களாவார்

35 இறைவனை அடைந்தவர்க்கு இல்லைச் சாதியில்
திறம்எரி தழல்இடைச் சேரில் பேதம்எவ்
விறகுள உயர்சிவ பூசை வேட்டுளோர்
கறைதவிர் நிலமிசைக் கணங்கள் அல்லரோ.

கருத்து - நெருப்பிடைச் சார்ந்த விறகிற்கு எல்வித வேறுபாடும் இல்லாததைப் போல, சிவனை வழிபட்டு வருபவருக்குச் சாதி சிவற்றுமை இல்லை என்க. சிவனை வழிபட்டு வருபவர் எல்லாம் சிவகணங்கள் அல்லரோ?

## 4- பிராணலிங்கத்தலம்

### பிராணலிங்கி.

36 பேர்அறி உருவாய் நின்ற பிரமமே இலிங்க
மாம்அவ்
ஓர்உறும் இலிங்க சத்தி பிராணநல் உருவாய்
நிற்கும்
தேர்உறும் இனைய வாறாம் சிவலிங்கந்தனை
உணர்ந்தோர்
ஏர்உறு பிராண லிங்கி என்பவன் என்பர் மேலோர்.

கருத்து:- பெரிய அறிவுருவாய் உள்ள பிரமம் என்னும் பொருளே இலிங்கமாகும். இந்த இலிங்கத்தோடு ஒன்றுபட்டுள்ள சத்தியே பிராணன் என்று கூறப்படும். இத்தகைய பிராணஇலிங்கத்தைமனத் தால் வழிபாடு செய்வோன் பிராணலிங்கி என்க,

### பிராணலிங்கபூசை

37 நன்றுஉறும் இதயம் தன்னில் ஞானஇலிங்கத்தை
எய்தி
நின்றுஎழும் அன்பி னாலே நினைவெனும் மலர்கள்
கொண்டு
புன்தொழில் இலாது செய்யும் பூசனை அதுவே
கண்டாய்
ஒன்றொரு பிராணலிங்க பூசைஎன்று உரைப்பது
அன்றே.

கருத்து:- நல்ல இதயத்தில் ஞான வடிவான பிராணலிங்கத்தை வைத்து மேலும் மேலும் எழுகின்ற அன்பினாலேநினைவு என்கின்ற மலர்களைக் கொண்டு செய்யும் பூசையே பிராணலிங்கபூசை யாகும்.

## 5-சரணத்தலம்

### சரணன்

38. யாவன்நல் பிராண லிங்க பூசனை எழுவாய் மேனிப்
பாவுறு சிவமாய்த் தன்னைப் பாவிக்கும் அறிஞன்
அன்னோன்
மேவுறும் ஞான பாக விளைவினால் சரண நாமம்
தாவறும் உலகம் எல்லாம் சாற்றிடப் படுவன்
அன்றே.

கருத்து:- எவன் ஒருவன்பிராணலிங்க பூசையை மனத்தால் செய்து, அப்பூசைப் பயனால் தன்னைச் சிவமாகக் கருதிக் கொள்பவனை அறிஞர் லிங்கி என்று கூறுவர்,

தேவர்க்கு எல்லாம் தேவனாகிய மகாதேவனை அடைக்கலமாக அடைபவன் (சரணாக அடைபவன்)சரணன் என்க.

அத்தகைய சரணன் தாமசம். இராசதம் முதலியகுணங்களை விட்டு சத்துவகுணத்தை உடையவராக இருக்கவேண்டும்.

## சத்துவ குண இயல்பு

39. மெய்ம்மை சாந்தி தமைவி வேகம்பொறை
செம்மை நல்ஒழுக் கம்சிவ பத்திதான்
அம்ம பூரண பாவம் அருள்துறவு
இம்மை உள்ளவன் சத்துவம் எய்தினோன்.

கருத்து:- மெய்ம்மையும், சாந்தியும்,தமையும்,விவேகமும்,பொறுமையும்,நல்லொழுக்கமும்,சிவபத்தியும், பூரணபாவமும்,அருளும் துறவும் இவை களைப் பெற்று இருத்தல் குணம் உடையவன் இயல்பு.

குறிப்பு;- சாந்தி–அமைதி. தமை என்பது மெய், வாய், கண்.மூக்கு செவி என்னும் புறக்கருவிகளை அடக்கி ஒழுகுதல். துறவு-பற்று அற்ற தன்மை,

## சரணனுடைய சீலம்

40 சரண் அடைந்தவர் தங்களைக் காத்திடும்
பரனை நெஞ்சுஉறப் பாவிக்கும் தன்மையே
திரம்உறும் பெறும்சீலம் என்று ஓதுவார்
உரம் உணர்ந்த உரன்உடை யாளரே.

கருத்து:- அடைக்கலம் அடைந்தவர் தங்களைக் காக்கும் ஆற்றல் உடைய பரமேசுவரனை மனம் பொருந்த எப்பொழுதும் கருதிக் கொண்டிருக்கும் தன்மையே சரணன் உடைய பெரிய சீலம் என்க.

## 6 அயிக்கியத்தலம்

41 அழிதரு நிலைவிடய ஆனந் தத்துளி
விழைதலை விடுத்துள விமல நெஞ்சினோன்
எழுதரு சிவானந்தம் என்னும் வேலையுள்
முழுகுதல் அயிக்கியம்என்று உரைப்பர் முன்னேயோர்.

கருத்து:- அழியும் நிலைமையை உடைய உலகப் பொருள்களைப் பெற்று,அதனால் அடையும்இன்பத்துளியைவிட்டு,அழியாப் பொருளாகிய சிவனைப் பெற்று,அதனால் உண்டாகும் பேரின்பக் கடலுள் மூழ்கிஇருப்பவன் அயிக்கியன் என்க.

## அயிக்கியனுடையபாவனை.

42. தளைந்துள தளைவலி தணந்து மாசுஅறத்
தெளிந்துள நெஞ்சினால் சிவோகம் பாவனை
உளங்கொளு நிலைஉடை ஒருவனே கலை
அளந்தறி முனிவர! அயிக்கியன் ஆகுவான்.

கருத்து:- கலையை அளந்தறியும் அகத்தியமுனிவரனே! கட்டியுள்ள பாசமாகிய தளையின் வலியைநீக்கி,மாசுஅறத்தெளிந்த மனத்தால் சிவோகம் பாவனை செய்பவனே அயிக்கியன் ஆகுவான் என்க.

குறிப்பு:- சோகம் பாவனை வேறு. சிவோகம் பாவனை வேறு. அவனே நான் என்று பாவிப்பது சோகம் பாவனை. ஹம்ஸ என்ற எழுத்துக்களை ஸஹம் என்று மாற்றி உச்சரிக்க. ஸோஹம்என்ற சொல் தமிழில் சிவோகம் என்றாயிற்று. இதற்குப்பொருள் சிவனே நான் என்பது.

## வாழ்த்து.

43. மாரி பெய்க மநுநெறி ஓங்குக
பாரில் ஒண்சிவ பத்தர்கள் மல்குக
சீரின் மல்கு சிவன்புகழ் வெல்குக
வீர சைவம் விளங்குக எங்குமே.

## நிறைவு பெற்றது.

சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.

# சித்தாந்த சிகாமணியின் அங்கத்தலத் திரட்டு பாடல்களின் முதல் குறிப்பு அகர வரிசை.

[எண்: பாடல்களில் எண்.]


| பாட்டு | எண் | பாட்டு | எண் |
|---|---|---|---|
| அக்க | 12 | திரம்பெறு | 6 |
| அச்சிவ | 26 | தேசி | 20 |
| அழிதரு | 41 | நலங்கொள் | 15 |
| ஆசுஅறும் | 4 | நல்குரு | 34 |
| ஆதலால் | 29 | நன்றுறும் | 37 |
| இறைவனை | 35 | நியமம் | 22 |
| உரம்பெறு | 8 | பங்கயம் | 21 |
| எங்ஙனும் | 28 | பத்தி | 19 |
| ஐந்து | 14 | பண்டொ | 2 |
| கலயமுத | 9 | புகழ்தல் | 16 |
| சங்கரன் | 30 | பூசனை | 25 |
| சரண் | 40 | பூதிபால் | 11 |
| சித்தம் | 1 | பேராதி | 36 |
| சிரமதில் | 10 | போதகா | 33 |
| சிற்கலை | 27 | மாசறு | 5 |
| சுத்தர்கள் | 31 | மாரி | 43 |
| செவ்விய | 18 | முந்தை | 24 |
| சோதி | 23 | முன்னர் | 13 |
| தம்பொரு | 7 | மூலகாரண | 17 |
| தனைந்துன | 42 | மெய்ம்மை | 39 |
| தனக்கு | 32 | யாவன் | 38 |
| | | வினைவழி | 3 |


இந்த நூல் பாடல்களின் முதல்குறிப்பு அகரவரிசையைத் தொகுத்தளித்தவர்:

**திரு. சு. பாலமுருகன்.**

13பி சிவன்சந்நிதித் தெரு, சின்னசேலம்– 606 201.

இந்த நூலின் கையெழுத்துப் படியினைத்தட்டெழுத்துச் செய்து உதவிபுரிந்தவர்:

**திரு. ம. சு. மோகனரங்கன், பி.எஸ்சி.**

49, சிவன் சந்நிதித் தெரு, சின்னசேலம்-606201.

இவர்களுக்கு எங்கள் வாழ்த்து.

பின் சேர்க்கை:

உ

# இறைவன் துணை.

## கோளறுபதிகம்-தேவாரம்.

''வேயுறு தோளிபங்கன் விடம்உண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே''

—திருஞானசம்பந்தர்.

## மிருத்யுஞ்சயமந்திரம்.

[வாழ்நாள் நீடிக்க]

''மிருத்யுஞ்சயாய ருத்ராய நீலகண்டாய சம்புவே
அமிர்தேசாய சர்வாய ஸ்ரீமந்மகாதேவாயதே நம:
திரியம்பகம் யசாமகே சுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருக மிவபந்தனான் முட்சீயம் ஆம்ருநாத்''.

–மகாநாராயணஉபநிடதம்.

## செய்யுள்.

''முக்கண்ண முருகுடையோய் உடல்நலத்தை வளர்க்கும்
முதல்வனே பற்றின்றி உனைப் போற்றுகின்றேன்.
எக்கண்ணும் இறக்கின்ற துன்பநிலை நீக்கி
இறவாத அமிழ்தநிலை எளியேர்க்கே ஈவாய்''.

இச்செய்யுளை குகையூர் அண்ணார்
புலவர் திரு. அடிகளாசிரியர் அவர்கள்
இயற்றி அளித்தார்கள்.

